# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2319/22 - 2023 පෙබරවාරි මස 13 වැනි සඳුදා - 2023.02.13

*2319/22 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (XV) (ஆ)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின்கீழான கட்டளை*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, இக்கட்டளை மூலம்-

(அ) மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படுகின்றதும், இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானதும் 2006, யூன் 09 ஆந் திகதிய 1448/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, (2017, சனவரி 18 ஆந் திகதிய 2002/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட) சொல்லப்பட்ட அட்டணையின் நிரல் I இலும் அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற “தாதியியல் பீடம்” என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் பதிவைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன்:-


1A - PG 6218 — 457 (2023/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

“நிரல் I

சுதேச மருத்துவப் பீடம் (1979, திசெம்பர் 21 ஆந் திகதிய 67/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க உண்ணாட்டு மருத்துவ கல்விக் கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட உண்ணாட்டு மருத்துவ கல்வி நிறுவகம் என முன்னர் அறியப்பட்டதான)

நிரல் II

1. காய சிகிச்சை மற்றும் தேசிய சிகிச்சைத் துறை (ஆயுர்வேத மருத்துவ மற்றும் சுதேச மருத்துவத் துறை)
2. மோலிஜாத் துறை (யூனானி மருத்துவக மருத்துவத் துறை)
3. இல்முல் அத்வியாத் துறை (யூனானி மருந்தியல் துறை)
4. சல்ய சாலகய மற்றும் பிரசூதிதந்திர கௌமாரபுத்யத் துறை (ஆயுர்வேத அறுவை மருத்துவ, காது, மூக்கு, தொண்டை மருத்துவம், கண் மருத்துவவியல் மற்றும் மகப்பேற்று, பெண்ணோயியல் அத்துடன் குழந்தை மருத்துவத்துறை)
5. திரவ்யகுண விஞ்ஞான மற்றும் ஸ்வஸ்தவுரித்தத் துறை (ஆயுர்வேத மருந்தியல், மருந்தாக்கவியல் மற்றும் சமுதாய மருத்துவம்)
6. மௌலிக சித்தாந்த மற்றும் ஷரீர விஞ்ஞானத் துறை (அடிப்படைக் கோட்பாடுகள், ஆயுர்வேத உடற்கூற்றியல் மற்றும் உடலியங்கியல்)”;

(ஆ) இக்கட்டளை 2023, மாச்சு 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்.

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா.உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, சனவரி 30.

EOG 02 - 0140

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.